[திரு. பா. பரணிகுமார்] [2002 மே 6

ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது 45 அடிக்கு மேல் தண்ணீர் இருக்கக்கூடிய நிலையில்கூட, தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அதனால் விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இனிமேலாவது இந்த மாதிரி இல்லாமல், அதிகத் தண்ணீரை இப்போதாவது விட்டு, விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 தினங்களுக்கு ஒருமுறை அங்கே முறை வைத்து தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. முன்பு 5 தினங்களுக்கு ஒருமுறை என்று வைத்து தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது மேட்டூரில் நீர்மட்டம் குறைவாக இருப்பதால், 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் கொடுக்கப்பட்டு வருகிறது. 11-4-2002 வரை கொடுத்திருந்தோம். மீண்டும் 19-4-2002-லிருந்து 24-4-2002 வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. 3-5-2002-லிருந்து தண்ணீர் அந்த வாய்க்காலுக்குச் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படாத வகையில் தொடர்ந்து நீர் தரப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே வாய்க்காலில் இருக்கின்ற மாசுகளை, அதாவது காட்டாமணக்குச் செடிகளை அகற்ற வேண்டுமென்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு, அந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(ஆ) கோவை, சிறுவாணி மற்றும் வேலூர் ஜவ்வாது மலைப் பகுதிகளில் காட்டு யானைகளால் பயிர்கள் நாசம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், சிறுவாணி மலைப் பகுதி கிராமங்களிலும், வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதி, மந்தாரக்குட்டை, ரெட்டியூர், படக்குப்பம், பெண்ணாகரம், தளி ஆகிய கிராமங்களிலும் காட்டு யானைகள் வயலுக்குள் வந்து பயிர்களை, மரங்களை நாசம் செய்து,

2002 மே 6] [திரு. சி ஞானசேகரன்]

மக்களைத் துரத்துவதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

அறிக்கை

கோவை மாவட்டம், சிறுவாணி மலைப் பகுதி கிராமங்களில் தற்போது காட்டு யானைகளின் தொந்தரவால் பதட்டமான சூழ்நிலை ஏதும் நிலவவில்லை. வனப் பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் சில நேரங்களில் காட்டு யானைகள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்தும் நிகழ்வுகள் ஆங்காங்கே ஏற்படுகின்றன. இது குறித்து தகவல் கிடைக்கப்பெற்றதும், வனப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று யானைகளின் கூட்டத்தை மீண்டும் வனப் பகுதிக்குள் விரட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கும் காட்டுப் பகுதியிலிருந்து, விவசாய நிலங்களுக்கு வரும் யானைகளை துன்புறுத்தாமல் இருக்கத் தேவையான ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் வனச்சரகத்திற்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதிகளில் மந்தாரக்குட்டை, ரெட்டியூர், படக்குப்பம் ஆகிய கிராமப் பகுதிகளில் யானைகள் ஊருக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்வது, பயணிகளைத் துரத்துவது மற்றும் பொதுமக்களைத் துரத்துவதால் ஏற்படும் பதட்டம் குறித்து அறிக்கைகள் அவ்வப்போது வரப்பெறுகின்றன. அவற்றினைப் போக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

(1) துண்டுப் பிரசுரங்கள் ஆலங்காயம், ஆம்பூர், சிங்காரப்பேட்டை சரகங்களில் யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

(2) காவலூர், மந்தாரக்குட்டை, படக்குப்பம், ரெட்டியூர் ஆகிய இடங்களில் மாவட்ட வன அலுவலர் மற்றும் வன அலுவலர்கள் பொதுமக்களைச் சந்தித்து, விவாதித்து, அவ்வப்போது அறிவுரைகள் தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

(3) ஆம்பூர், ஆலங்காயம், சிங்காரப்பேட்டை சரகங்களில் வனச் சிப்பந்திகளைக் கொண்ட தனிக் குழு அமைக்கப்பட்டு, அவ்வப்போது

யானைகளின் நடமாட்டத்தினை தகவல் அறிந்து அவற்றைக் காட்டுக்குள் விரட்டி வருகின்றனர்.

(4) யானைகள் நடமாடும் பகுதிகளில் எச்சரிக்கை தகவல் பலகைகள் வைக்கப்படுகின்றன.

(5) யானைகள் நடமாட்டப் பதிவேடு ஒன்று திருப்பத்தூர் கோட்ட மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(6) பயிர்ச் சேதம் குறித்து அறிந்தவுடன் தணிக்கை செய்து நஷ்ட ஈடு வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(7) யானைகளின் போக்கைக் கண்காணித்து வன அலுவலர்களுக்குத் தகவல் தெரிவிக்க கிராம இளைஞர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(8) பயிர்ச் சேத நிவாரணத் தொகை ரூ. 87,435 இதுவரை 67 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(9) யானைகளால் காயமுற்ற மூன்று நபர்களுக்கு ரூ.25,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

(10) யானைகளால் தாக்கப்பட்டு இறந்த இரண்டு நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.50,000 வீதம் ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே பெருவாரியாக, அந்த யானைகள் எந்தெந்தக் கிராமங்களில் வந்து பயிர்களை நாசம் செய்கின்றனவோ அல்லது மக்களைத் துன்புறுத்துகின்றனவோ, அந்தப் பகுதி மக்களுக்கு மட்டுமேதான் அறிவுரைகள் அதிகமாகச் சொல்லப்பட்டதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே, துண்டுப் பிரசுரங்கள் ஆலங்காயம், ஆம்பூர், சிங்காரப்பேட்டை சரகங்களிலே யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-10

அதேபோல பொதுமக்களைச் சந்தித்து விவாதித்து அறிவுரைகள் தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கின்றன என்று இப்படித்தான் இருக்கிறதே ஒழிய, இந்த யானைகள் இந்தக் கிராமப் பகுதிகளுக்குள்ளே வரவிடாமல் அல்லது பயிர்களை நாசம் செய்யாமல் இருப்பதற்கு என்ன வழிவகை

என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லவில்லை. இதிலே ஏனோ நாட்டம் செலுத்தாமல், அறிக்கையை அதிகாரிகள் தயார் செய்து கொடுத்து இருக்கிறார்கள். பொதுவாக இதற்கு முக்கிய காரணமே, வனப் பகுதிக்குள் இந்த யானைகளுக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. கோடைக் காலங்களில் தண்ணீர் இல்லாத காரணத்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டுமென்று கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : அதுதான். அதற்குத்தான் வருகிறேன். Just I am making a suggestion for that. வனப் பகுதிகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால், தண்ணீரைத் தேடி இந்த யானைகள் எல்லாம் கிராமப் பகுதிகளுக்குள் வந்து பயிர்களை நாசம் செய்யத் தொடங்கிவிடுகின்றன. ஜப்பான் ஸ்கீமில் நிறைய கசிவுநீர்க் குட்டைகளையெல்லாம் கட்டுகிறோம். தேவையில்லாத இடங்களில், தண்ணீரே இல்லாத இடங்களில் கட்டிவிடுகிறார்கள். தண்ணீர் தேங்கக்கூடிய அளவுக்கு நீங்கள் நீராதாரம் வரக்கூடிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்திலே கசிவுநீர்க் குட்டைகள், குளங்கள் போன்றவற்றை அமைத்து தண்ணீரைத் தேக்கி வைப்பீர்கள் என்று சொன்னால், அந்த யானைகள் நிச்சயமாக கிராமப் பகுதிகளுக்கு வரக்கூடிய வாய்ப்பு ஓரளவுக்குத் தடுக்கப்படும்.

இரண்டாவது வனத் துறை அலுவலர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: அதுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே கருத்துகளைச் சொல்லாதீர்கள். அமைச்சரிடம் கருத்தைக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இதைச் சொல்லிவிட்டு கருத்துக்கு வந்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே இந்தப் பெண்ணாகரம் பகுதி, அதேபோல ஜவ்வாது மலைப் பகுதிகளில் நான் சொல்லியிருக்கிற கிராமங்கள் மற்றும் சிறுவாணி மலைப் பகுதிகளிலே கசிவுநீர்க் குட்டைகளை ஏற்படுத்தித் தருவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா? அதேபோல இந்த யானைகளை வரவிடாமல் எல்லைகளிலே பாதுகாவலர் வைத்துத் தடுத்து நிறுத்துவதற்கு, சுற்றியுள்ள கிராமங்களுக்குள் வராத மாதிரி போதிய பாதுகாவலர்களைப்

போட்டுத் தடுப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நீண்டதொரு கேள்வியைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினரவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். கோவை மாவட்டம், சிறுவாணி மலைப் பகுதி கிராமங்களில், தற்பொழுது காட்டு யானைகளின் தொந்தரவால் பதட்டமான சூழ்நிலை ஏதும் இல்லை என்பதை அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வனப் பகுதிகளை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் சில நேரங்களில் காட்டு யானைகள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதுகுறித்து தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன், வனப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று யானைகளின் கூட்டத்தை மீண்டும் வனப் பகுதிகளுக்குள் விரட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களும் காட்டிலிருந்து விவசாய நிலங்களுக்கு வரும் யானைகளைத் துன்புறுத்தாமல் இருக்க தேவையான ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வேலூர் மாவட்டம், ஆலங்காயம், வனச்சரகத்திற்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதி, மந்தாரக்குட்டை, ரெட்டியூர், படக்குப்பம் ஆகிய கிராமப் பகுதிகளில் யானைகள் ஊருக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்வதாலும், பயணிகளைத் துரத்துவதாலும், பொதுமக்களைத் துரத்துவதாலும் ஏற்படும் பதட்டம் குறித்து அங்கே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. துண்டுப் பிரசுரங்கள் அந்தப் பகுதிகளிலே யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளிலே விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், அவர் யானைகள் உள்ளே வராமல் இருப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: அவை வருவதைத் தடுக்க பல்வேறு தடைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே இளைஞர்களுக்கெல்லாம் பயிற்சிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. யானைகள் தண்ணீர் குடிப்பதற்கு அங்கே உணவு அருந்துகிற வகையில் பல்வேறு நிலைகளை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல பயிர்கள் சேதத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ.87,435, 67 நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

2002 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது விவர அறிக்கையிலே இருக்கிறது. அது வேண்டாம். அவர் கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள் போதும்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: தண்ணீர் தருவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், திரு. மணி கேட்கட்டும். ஏற்கெனவே இரண்டு, மூன்று கேள்விகளைக் கேட்டுவிட்டீர்களே! யானையை விடமாட்டீர்கள் போலிருக்கிறதே! (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. என்ன நடவடிக்கை எடுக்கப் போவதாக சொல்லவில்லை. யானைக்குப் போதிய அளவு வசதி பண்ணுகிறோம் என்று சொல்கிறார். இப்பொழுது அவர் சொன்னதிலேகூட உண்மை இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், எங்களுடைய தலைவர் எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தொகுதியான தொண்டாமுத்தூர் பகுதி, சிறுவாணி பகுதிகளிலே இப்பொழுதும் யானைகள் வந்தவண்ணமாக தொல்லைகள் கொடுத்தவண்ணமாக இருக்கின்றன. இந்த மந்தாரக்குட்டை பகுதியிலே என்னுடையதே 35 ஏக்கர் இருக்கின்றன. நான் பயிர் செய்யவில்லை, யானைகள் வந்து ஒவ்வோர் ஆண்டும் பயிர்களை நாசம் செய்துவிடுகிற காரணத்தால், நிலத்தில் பயிர் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டிருக்கிறேன். ஆகவே, இதிலே யானைகளுக்குப் பயந்து, நீங்கள் சிறுவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவுரைகள் சொல்லுவதைவிட, யானைக்கு நீங்கள் என்ன அறிவுறுத்தப்போகிறீர்கள்? யானையை எப்படி நீங்கள் தடுத்து நிறுத்தப் போகிறீர்கள்? கசிவுநீர் குட்டையைக் கட்டுவீர்களா...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். திரு. மணி, நீங்களும் கேட்டுவிடுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் சேர்த்து சொல்லட்டும். அமைச்சர் உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய நண்பர் திரு. ஞானசேகரன் சொன்ன மாதிரி கோவை மாவட்டம்...

[2002 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரனா, யானைசேகரனா என்று தெரியவில்லை. *(சிரிப்பு)*

முற்பகல் 10-15

திரு. ஜி.கே. மணி: எல்லோருக்கும் அவர் சேகரனாக இருக்கிறார். அவர்கள் சொன்ன மாதிரி, கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் சிறுவாணி பகுதியிலேயும், இன்னும் ஈரோடு மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயும், சேலம் மாவட்டம் கொளத்தூர் போன்ற பகுதிகளிலேயும், அதுபோன்று தருமபுரி மாவட்டத்திலே என்னுடைய தொகுதி பெண்ணாகரம், தளி, ஒகேனக்கல் போன்ற பகுதிகளிலேயும், காட்டு யானைகளுடைய தொந்தரவுகள் இப்போது அதிகமாக இருந்துகொண்டிருக்கின்றன. காரணம், மழை இல்லை; காடுகளே வறண்டுவிட்டன. குடிப்பதற்கு தண்ணீர் இல்லாத காரணத்தினாலே கிராமங்களை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக, கரும்பு எங்கெல்லாம் பயிர் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. இதற்கு முன்னாலேகூட கிராமப்புறங்களிலே யானை வந்தால் தீப்பந்தத்தைக் காட்டித் துரத்துவார்கள். இப்போது வன அதிகாரியுடைய கெடுபிடி அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்தச் செயல்களிலே பொதுமக்கள் ஈடுபடுவதில்லை. அதிகாரிகள் தங்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று பயந்து அமைதி காக்கிறார்கள். பகல் நேரங்களிலே வருகின்றன; இரவு நேரங்களிலே வந்து பிளிறுகிற சத்தத்தைக் கேட்டால், பொதுமக்களும் அலறியடித்துக்கொண்டு வீடுகளிலே தங்கி விடுகிறார்கள்.

கடந்த மாதம் என்னுடைய தொகுதியிலே ஒருவரை அடித்து அதே இடத்திலே கொன்றுவிட்டது. தொடர்ந்து பெண்ணாகரம் பகுதியிலே, சொரக்காய்பட்டி காந்திநகர் பகுதியிலே வந்துகொண்டிருக்கின்றன. தளி பகுதியிலே வந்துகொண்டிருக்கின்றன. ஈரோடு பகுதியிலே சத்தியமங்கலம் பகுதியிலே நிறைய தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்த யானைத் தொல்லைகளை அடக்குவதற்கு, யானைகளை விரட்டி அடிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. நான் வேதனையோடு சொல்கிறேன். அதிகாரிகளிடத்திலே புகார் கொடுத்தால் அதை ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். கிராமத்திலே இருக்கக்கூடிய பொதுமக்களை யானைகளை விரட்டுவதற்கு அழைத்தால்கூட அவர்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே இதில் அதிகக் கவனம்

செலுத்தவேண்டும். ஒவ்வோர் உயிரும் விலை மதிக்க முடியாத உயிர். அதே நேரத்திலே, தண்ணீர்ப் பற்றாக்குறையிலே, குழந்தைகளைக் காப்பதைப் போல அந்தக் கரும்பைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கரும்புப் பயிர் நாசமாகின்றது. இதையெல்லாம் தடுப்பதற்கு அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். சில இடங்களிலேகூட Electric வேலியெல்லாம் செய்து வைத்திருந்தார்கள். இப்போதெல்லாம் பயப்படுகிறார்கள். இதுவெல்லாம் தேவையில்லாத ஒன்று; விரட்டினாலே போதும். விரட்டுவதற்கு அதிகாரிகள் இதிலே அக்கறை செலுத்த வேண்டுமென்ற அறிவிப்பை நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லா அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்கேற்ப, பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்திருந்தாலும் வனம் முழுவதும் வேலி போடுவது என்பது இயலாத காரியம். என்றாலும்கூட, யானைகள் வெளியே வராத அளவிற்கு, அவற்றிற்கு தாகத்தைத் தீர்ப்பதற்காக சில தொட்டிகளை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதுகுறித்து அந்தந்தப் பகுதிகளிலே வனச் சரகர்களுக்கெல்லாம் உத்தரவிடப்படும் என்பதையும் இந்த நேரத்திலே இந்த அவைக்குப் பணிந்து தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(4) அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி அவர்கள்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் குறித்த குழுவின் ஒன்பதாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.